## திருச்சி ரயில்வே கோட்டத்தில் இந்தியில் மட்டும் பெயர்ப் பலகை:

# கருப்பு மை கொண்டு அழித்து தி.மு.க.வினர் போராட்டம்!

### மாவட்டச் செயலாளர் வைரமணி தலைமையில் – மேயர் அன்பழகன் முன்னிலையில் – கழகத்தினர் முற்றுகை!




திருச்சி,மார்ச்.6-

“இந்தியில் பெயர் பலகை” வைத்திருந்த திருச்சி ரயில்வே கோட்ட மேலாளர் அலுவலகத்தை முற்றுகையிட்டு திருச்சி மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி தலைமையில் மாநகரச் செயலாளர் மேயர் அன்பழகன் முன்னிலையில் தி.மு.க.வினர் போராட்டம் நடத்தினர்.

ரயில்வே நுழைவு வாயில் கல்வெட்டில் இருந்த இந்தி எழுத்தை கருப்பு மை கொண்டு அழித்தனர்.

திருச்சி ரெயில்வே கோட்ட மேலாளர் அலுவலகம் திருச்சி ஜங்சன் ரயில் நிலையம் அருகே அமைந்துள்ளது. அந்த ரயில் நுழைவு வளைவு புதிதாக கட்டப்பட்டுள்ளது.

இதில், அலுவலக வாயில் என்பதை இந்தி வார்த்தையில் “கர்தவ்ய த்வார்” குறிப்பிடுகின்றனர். இதனை, கர்தவ்ய த்வார் என தமிழ் எழுத்துக்களைக் கொண்டும், KARTAVYA DWAR என்ற ஆங்கில எழுத்துக்களைக் கொண்டும் எழுதியுள்ளனர்.

அலுவலக நுழைவாயில் என்பதை தமிழர்கள் எளிதில் புரிந்து கொள்ள முடியாத வகையில், தமிழ் எழுத்துக்களை கொண்டு இந்தி மொழி வார்த்தையில் எழுதியுள்ள ரயில்வே நிர்வாகத்தினரை கண்டித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் உள்ளிட்ட கூட்டணிக் கட்சித் தலைவர்கள் குரல் கொடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் ரயில்வே கோட்ட மேலாளர் அலுவலக நுழைவாயில் முன்பாக, தி.மு.க.வினர், திருச்சி மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி அவர்கள் தலைமையில் மாநகரச் செயலாளர் மேயர் அன்பழகன் அவர்கள் முன்னிலையில் 500க்கும் மேற்பட்ட கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் தடையை மீறி பேரணியாக சென்று முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினார்கள்.

மேலும் கல்வெட்டில் இருந்த இந்தி எழுத்தை மைகொண்டு அழித்து ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து கண்டன கோஷங்களை எழுப்பினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மத்திய மாவட்ட பொருளாளர் துரைராஜ், மண்டலக் குழு தலைவர் துர்கா தேவி, பகுதிச் செயலாளர் மோகன்தாஸ், கனகராஜ்,மாமன்ற உறுப்பினர்கள்,காஜா மலை விஜி, முத்துச்செல்வம், கலைச்செல்வி, ராமதாஸ் உள்ளிட்ட நூற்றுக்கு மேற்பட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




**சென்னை,மார்ச்.6–**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:**

**அகற்றப்பட்டது இந்தி எழுத்துகள் மட்டுமல்ல; ஆதிக்க வெறியின் ஆணவமும்தான்!**

**உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசிப் போலித் தமிழ்ப்பற்று காட்டுபவர்களும் – அடிமைத்தனத்தின் அடையாளமாய் அவர்களுக்குத் துணை நின்று தமிழ்நாட்டுக்குத் துரோகம் இழைப்போரும் தமிழ்நாட்டு மக்களால் அகற்றப்படுவார்கள்!**

**தில்லியின் ஆணவத்துக்குத் தமிழ்நாடு என்றைக்குமே Out Of Control–தான்!**

**இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.**




